## சூரியவெவ பிரதேச சபை
## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து சூரியவெவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது 02 சிறுவர் பூங்காக்களை திருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 299,895 இற்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | மீண்டுவரும் செலவுகள் மூலதனப் படுத்தப்படக் கூடாது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நூலகமொன்றில் பிரிவுகளை வேறுபடுத்துவதற்காக மற்றும் கிராமிய நூலகமெனா்றில் ஏத்தாளம் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 235,199 இற்கான சொத்துக்களை முன்னேற்றும் பெறுமதியை மூலதனப்படுத்தி யிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | வெனிவெல்ஆர கட்டிடத்தை சுற்றி வலைவேலி நிர்மாணிப்பதற்காக செலவிடப் பட்டிருந்த ரூபா 78,023 தொகை குறைவாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ருஹுனு சுற்றுலா பணியக ஏற்பாடுகளின் மீது மதுனாகல வெந்நீர் ஊற்று வளவு அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த பணியகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,624,244 இற்கான சிட்டை பெறுமதி மற்றும் நிர்மாண வேலைக்கான கடன்பட்டோர் மறறும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதைகளை மோட்டார் கிரேடர் பண்ணுவதற்காக செலுத்தியிருந்த ரூபா 200,000 இற்கான எரிபொருள் செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 151,313,683 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | மீதிகளை உறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | கணக்காய்வு பந்தியை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) | புதிய வீதவரி அதிகாரப் பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இனங்காணப்பட்ட ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு 2018 அக்தோபர் 29 திகதி பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன், அந்த வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் 2020 ஆண்டில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபாப/ பபாகோ/2010/01 இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 10 கடைகளில் இருந்து ஒரே முறையில் செலுத்தும் பணம் ரூபா 337,592 தொகை அறவிடப்பட்டிருக்காததுடன் அந்த நிலுவை மீதியில் 2011 இற்கு முன்னர் நிலுவை மீதி ரூபா 292,592 தொகையாக இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த மீதியில் அறவிடப்பட முடியாத ரூபா 270,992 தொகை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் முதலமைச்சு செயலாளருக்கு 2017.02.28 திகதி அனுப்பியிருந்ததுடன், சூரியவெவ பஸ் நிலையத்தின் உரிமை சபையிடம் காணப்படாமையால் கடை வாடகை ரூபா 21,600 தொகையினை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது. அந்த கடைகளின் உரிமையை பெற்ற பின்னர் நிலுவைத் தொகை அறவிடப்படுவதுடன், இன்னும் 02 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 45,000 தொகை அறவிடப்பட முடியாமையினால் அந்த கடைகளை சபைக்கு உரித்தாக்கப்பட்டது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,762,304 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,072,724 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 831,000 | 911,710 | 914,460 | 15,350 | 1,115,000 | 813,030 | 810,180 | 18,100 |
| வாடகை | 19,323,100 | 17,077,595 | 17,008,480 | 981,065 | 19,847,500 | 17,930,430 | 17,813,530 | 911,950 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,229,100 | 1,283,599 | 1,309,049 | 1,750 | 1,164,200 | 1,058,871 | 1,031,671 | 27,200 |
| ஏனைய வருமானங்கள் | 2,037,000 | 6,727,844 | 4,531,201 | 7,873,297 | 5,720,300 | 7,187,516 | 4,632,518 | 5,676,654 |
| மொத்தம் | 23,420,200 | 26,000,748 | 23,763,190 | 8,871,462 | 27,847,000 | 26,989,847 | 24,287,899 | 6,633,904 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 32,634,652 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 23,763,190 தொகையாகக் காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் முன்னேற்றம் 73 சதவீதமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு பந்தியை ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சூரியவெவ அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வரும் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் சபையினால் குப்பைகள் சேகரிக்கப்பட்ட போதிலும் கட்டணம் ஒன்று அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அந்த நிறுவனத்தில் இருந்து குப்பைகளை பெற்றுக்கொள்ளா ததுடன் குப்பை வரி செலுத்தினால் மாத்திரமே குப்பைகளை பெற்றுக் கொள்ளப்படும் என குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப் பட்டது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 36 கடைகளில் இருந்து ரூபா 826,950 இற்கான கடை வாடகை மற்றும் ரூபா 84,190 இற்கான தாமதக் கட்டணமாக மொத்தம் ரூபா 911,140 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந்த மீதிகளில் நிலுவையாக காணப்பட்ட காலவீச்சு 2012 ஆண்டு 2018 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்தது. மேலும் அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையில் ரூபா 251,405 தொகை பதிவழிப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டிருந்ததுடன் மீதியான நிலுவையில் ரூபா 20,225 தொகை அறவிடப்பட்டது. |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,103,280 தொகை மற்றும் ரூபா 403,796 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையில் ரூபா 2.500,000 தொகை 2019 பெப்ரவரி 08 திகதி சபைக்கு கிடைத்திருந்ததுடன், மீதித் தொகையை அனுப்பும் படி பிரதான செயலாளர் ஆணையாளரிடம் விண்ணப்பித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மதுனாகல குப்பை முகாமைத்துவ நிலையத்தை சுற்றி மின்வேலி பொருத்தும் நிர்மாண வேலைக்காக 2018 திசெம்பர் 10 திகதி ரூபா 1,132,660 இற்கான மதிப்பீடு ஒன்று மீது உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த நிர்மாணவேலை ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிர்மாண வேலை நிறைவேற்றப் பட வேண்டும். | இதற்காக மாகாண சபையினால் ரூபா 1,000,000 தொகை ஒதுக்கப் பட்டிருந்த போதிலும் அந்த வேலையை ஆரம்பிக்கும் போது காணி உரிமையாளர்கள் மற்றும் சபைக்கு இடையே சிக்கல் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் காணி பயன்பாட்டு குழுவின் பரிந்துரையை பெற்று சட்டரீதியாக இந்தக் காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். மின்கம்பி பொருத்தி காவல் குடில் உடனான கட்டிடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதுடன் வேலி அடிக்கும் அலுவல்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2018 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள 90 அபிவிருத்தி திட்டங்களில் 25 அபிவிருத்தி திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிரந்தன. | பாதீட்டில் உள்ளடங்கிய அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்று வதற்காக செயற்பட வேண்டும். | மந்திரிமாரின் நியமனத்தின் பின்னர் அவர்களுக்கு கிடைத்திருந்த மக்கள் கருத்துக்களுக்கும் கவனம் செலுத்தி அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதனால் பாதீட்டில் குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

## (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த குப்பைகளை, வகைப்படுத்தாமல் முறையற்ற விதமாக மதுனாகல பகுதியில் அமைந்துள்ள திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றும் காணியில் அகற்றப்பட்டிருந்தது. | குப்பைகளை வகைப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த காணி திறந்த காணி ஒன்று எனவும் மின் வேலி பொருத்துவதற்கு முடியாமல் போனதால் வெளித் தரப்பினரும் இங்கு குப்பைகளை அகற்று கின்றனர் எனவும் இந்த காணிக்கு அண்மையில் காட்டு யானைகள் நடமாடுவதனால் காவலாளி ஒருவரை ஈடுபடுத்த முடியாததுடன் குப்பைகளை ஒவ்வொரு இடத்திலும் காணப்படுவதை ஏற்றுக்கொள்வது எனவும் மற்றும் குப்பைகள் வகைப்படுத்தி, சேகரித்து அகற்றப்படும் காணிக்கு எடுத்துச் சென்று அடிக்கடி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு மண்ணினால் மூடப்பட்டுள்ளது. |
| (ii) | சேகரிக்கப்படும் உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்தல் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட வேண்டும். | ஏற்பாடுகள் கிடைத்தவுடன் சேதனப் பசளை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படும். |
| (iii) | பிரதேச சபையின் திண்மக் கழிவுப் பொருள் செயற்திட்டத்திற்காக சுற்றாடல் பரிந்துரை பெற்றிருந்த போதிலும் அதில் உள்ள 05 நிபந்தனைகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் செயற்படுத்தி இருக்கவில்லை. | குறிப்பிட்ட நிபந்தனை களை செயற்படுத்த வேண்டும். | காணியை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொல்பொருள் திணைக்களத்தில் பரிந்துரையை பெற்றிருந்ததுடன், காணிகள் தீர்க்கப்படல், மின்வேலி அடித்தல் மற்றும் வலைவேலி பொருத்துதல் என்பவற்றின் மூலம் மீள்சுழற்சி செய்தல் சரியான முறையில் மேற்கொள்வதற்கு முடியும் ஏற்பாடுகள் வழங்கப்படாமையால் அச்சிக்கல்கள் ஏற்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அந்த சிக்கல்களுக்கு தீர்வு காணமுடியும். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கும் படி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்திருந்ததுடன் அந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிந்தது. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 55 மற்றும் 49 ஆகக் காணப்பட்டமையால் மிகை பதவியணி 01 மற்றும் வெற்றிட பதவியணி 07 உம் காணப்பட்டது. | பதவியணியின் மிகைப் பதவிகளை முறைப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்பல் வேண்டும். | 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பிரதான செயலாளரிடம் விண்ணப்பித்துள்ளதுடன் சாரதி வெற்றிடத்திற்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப் பட்டிருந்தது. 02 சுகாதார தொழில் களுக்காக சேவையை விட்டுச் சென்றிருந்த தொழிலாளர் ஒருவரை சேர்த்துக் கொள்வதற்காக அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் மிகை பதவிகளை அங்கீகரிப்பதற்காக முகாமைத் துவத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) கடந்த ஆண்டுகளின் போது சபையின் சேவையில் இருந்து விளகியிருந்த 14 ஊழியர்கள் தொடர்பாக ரூபா 46,230 இற்கான ஊழியர் பிணையினை தீர்த்திருக்கவில்லை. | ஊழியர் பிணை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்திருக்காததுடன் எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 04 திகதி தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 04 கணினி முறைமைகள் ரூபா 720,000 தொகை கைமாறுக்காக சபை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொண்டு அவற்றில் ரூபா 540,000 தொகை மீளாய்வாண்டின் போது திசெம்பர் 31 திகதி செலுத்தி இருந்த போதிலும் அந்த முறைமைகளின் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இந்த முறையை உச்ச மட்டத்தில் பேணப்பட வேண்டும். | களஞ்சிய இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையினை களஞ்சிய ஆவணங்கள் தயாரித்தல், மனித வள மற்றும் ஆளுக்குரிய கோவை முறைமை பதவியணியின் அனைத்து தகவல்கள் பெறக் கூடியதாக இருந்ததுடன் வாகன முறைமையில் வாகனங்களின் வகை, இலக்கம், பதிவு இலக்கம் ஆகிய தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆகஸ்ட் மாதம் முதல் பாவணைக்கு உதவாத நிலைமையில் காணப்பட்ட கப் வண்டி ஒன்று அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்து வதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனத்தை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படு வதுடன் பதிவு செய்தல் சான்றிதழ் கிடைத்த பின்னர அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 31 மயானங்களின் உரிமையை 2018 திசெம்பர் 31 திகதி வரையும் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மயானங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 18,500,000 தொகை பெறுமதியான 07 காணிகள் மற்றும் ரூபா 38,225,000 தொகைக்கான 11 கட்டிடங்களில் சட்ட ரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொதுக் காணிகளை உரித்தாக் கித்தரும் படி ஆளுனருக்கு அறிவிக்கப்பட்டது. |

### 3.5 பெறுகை

### 3.5.1 ஒப்பந்த நிருவாகம்

மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 இற்கான மதிப்பீடு ஒன்றின் மீது 2018 திசெம்பர் 30 திகதி 03 மரணாதார சங்கங்களுக்கு மற்றும் விவசாய அமைப்பு ஒன்றிற்கு சபையினால் பண்டங்கள் வழங்கும் அடிப்படையில் நான்கு மயானங்களை சுற்றி கம்பிவேலி அடிக்கும் நிர்மாண வேலைக்காக உடன்படிக்கை மேற்கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கையின் நாள் முதல் ஒரு வாரத்தில் நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட வேண்டு மெனினும் 2019 ஏப்ரல் 18 திகதி அளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 4 மயானங்களில் ஹத்போருவ, அந்தரவெவ மற்றும் பெத்தெவெவ மயானங்களில் வேலி அடித்து முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உற்பத்தி திகதி முதல் (2018 திசெம்பர் 27 திகதி) முதல் 90 நாட்களுக்கு பயன்படுத்தக் கூடிய 26 சீமெந்து பைகள் 2019 ஏப்ரல் 18 திகதி வரை பயன்படுத்தப்படாமையால் அவற்றை பயன்படுத்தக் கூடிய காலம் முடிவடைந்துள்ளது. மேலும் இதற்காக மேற்கொள்ளப் பட்ட ரூபா 25,480 இற்கான செலவுகள் சிக்கனமற்ற செலவு ஒன்றாகியுள்ளது. | சீமெந்து பைகள் குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்த வேண்டும். | காலவதியான சீமெந்து பைகளுக்காக ரூபா 15,120 இற்கான நட்டம் குறிப்பிட்ட சங்கத்தில் இருந்து அறவிடப்பட்டது. |
| (இ) | உடன்படிக்கையை மீறிய மேற்குறிப்பிட்ட சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் கரைநிரழிற் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கரை நிரழிற் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளித்திருக்கவில்லை. |

## 4. கணக்களிக்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டில் உள்ளடங்கிய ரூபா 10,000 இனை மிகைத்துள்ள 09 செலவு விடயங்களுக்கான ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 7,720,000 இற்கான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | ஆண்டின் போது செலவுகள் ஏற்படும் என்று எதிர்பார்த்த காரணங்களுக்காக பணம் ஒதுக்கப்பட்டதுடன் சில விடயங்கள் மேற்கொள்ளப் படாமை மற்றும் வருமானங்கள் என மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை கிடைக்கப்பெறாமை, நிர்மாண வேலை மேற்கொள்வதற்கு பணம் கிடைக்காமை ஆகிய காரணங்களினால் இந்த செலவுகளை மேற்கொள் வதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | 04 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 35,383,901 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்ட துடன், அவை 29 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | கணக்காய்வுப் பந்தியை ஏற்றுக் கொள்கிறேன். |